DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.STC.6/2025

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ரெத்தினவேல் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A5 present.)

07.03.2026 – 01.00 PM

முதல் விசாரணை

1. நான் தற்போது வாலிநோக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் ஆகியோர்கள் கடந்த 2021ம் ஆண்டு வாலிநோக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தார்கள். அவர்கள் தற்போது பணிமாறுதல் சென்றுவிட்டார். அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். எனவே அவர் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 26.10.2021ம் தேதி 20.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவர் வாலிநாக்கம் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது ரகுமத்துல்லா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.95/2021 பிரிவுகள் 147, 294(b), 379(NH) இ.த.ச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதியின் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.

4. அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தினத்தில் 20.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஐதர் அலி மற்றும் நிஜார் அலி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவ சாட்சிகளான ரகுமத்துல்லா, ஹபீப்புல்லா, சம்சீத் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. அத்துடன் அவர் பணிமாறுதல் சென்று விட்டபடியால் நிலையப் பொறுப்பில் வந்த சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் என்பவர் இவ்வழக்கினை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்சொன்ன சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் அதே சங்கதிகளை கூறியதால் புதியதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

7. மேலும் இவ்வழக்கின் எதிரிகளான முகமது ரியாஸ், அப்துல்லா புகாரி, முகமது ஹுதைபா, உம்முல் சரிபா, ஹக்குல்லா ஆகியோர்களை 18.01.2021 ம் தேதியன்று கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்துள்ளார்.

8. அதன் பிறகு இவ்வழக்கின் தன்மைக்கேற்ப பிரிவுகள் 379( NH) இ.த.ச வினை நீக்கம் செய்து 147, 294(b) இ.த.சவாக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.

9. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் என்பவரை விசாரணை செய்து எதிரிகள் முகமது ரியாஸ், அப்துல்லா புகாரி, முகமது ஹுதைபா, உம்முல் சரிபா, ஹக்குல்லா ஆகியோர்கள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b)) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:39:28 +0530